# செயலாற்றுகை அறிக்கை – 2015

# தேசிய திட்டமிடல் திணைக்களம்


1 திணைக்களத்தின் தூரநோக்கு,பணிக் கூற்று, தொழிற்பாடுகள், பொறுப்புக்கள் 38

2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள் 38

3. துறை வாரியான செயலாற்றுகை 39

3.1 விவசாயம் நீர்ப்பாசனம் பெருந்தோட்டம், மிருக வளர்ப்பு மற்றும் மீன்பிடி 39

3.2 மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை 42

3.3 வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து 44

3.4 வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் வளம் மற்றும் சுற்றாடல் 45

3.5 கைத்தொழில்கள், வர்த்தகம் உல்லாசப் பயணத்துறை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு 48

3.6 சுகாதாரம், கலை, தேசிய நல்லிணக்கம், விளையாட்டு மற்றும் சுதேச வைத்தியம் 50

3.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம், 52

3.8 பேரண்ட பொருளாதார திட்டமிடல் 56

3.9 பிரதேச அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு 57

3.10 பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சி 59

4. தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம் 60

5. மனித வள அபிவிருத்தி மற்றும் பொது நிர்வாகம் 61

6. நிதிச் செயலாற்றுகை 67

## 1. திணைக்களத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

### தூர நோக்கு

நாட்டின் அபிவிருத்தியில் ஆலோசகராகவும் வசதியளிப்பவராகவும் இருத்தல்.

### பணிக்கூற்று

நாட்டில் காணப்படும் வரையறுக்கப்பட்ட மூலவளங்களினூடாக உச்ச பயனைப் பெறக்கூடிய வகையில் சிறப்பான திட்டமிடல் அணுகுமுறைகளைப் பின்பற்றி கொள்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை உருவாக்குவதில் உயர்ந்தபட்ச தொழில்வல்லமையை பேணும் வகையில் சர்வதேச தரத்திலான திட்டமிடல் திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்துதல்.

### பிரதான தொழிற்பாடுகள்

- நீண்டகால, நடுத்தர கால அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் பொது முதலீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தமது துறைவாரியான திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயாரிப்பதில் உதவி செய்தல்

- பேரண்ட பொருளாதார சட்டகம் மற்றம் உபாயங்களை அபிவிருத்தி செய்தல்

- பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகள், உபாயங்கள், மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை மீளாய்வு செய்தல்

- வரிசை நிறுவகங்களினால் சமர்ப்பிக்கப்படும் கருத்திட்டங்களை மதிப்பீடு செய்தல்

- மூலதன வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதில் தொழிநுட்ப உள்ளீடுகளைப் பெற்றுக் கொடுத்தல்

- கருத்திட்ட முன்மொழிவு இருப்பை தயாரித்தல் மற்றும் மேம்படுத்தல்

- கொள்கை அபிவிருத்தி மற்றும் திட்டமிடல் தொடர்பில் திணைக்களத்திற்கு சாட்டப்படும் விசேட செயன்முறைகளை அமுல்படுத்தல்

- ஊழியர்களின் திறன் அபிவிருத்தி செயற்பாடுகள்

- பொது நிர்வாகம்

## 2. திணைக்களத்தின் பிரிவுகள் மற்றும் துறைகள்

திணைக்களத்தின் தொழிற்பாடுகளை மிகவும் சிறப்பாக கொண்டு நடாத்துவதற்காக திணைக்களமானது 9 துறைகளாக பிரிக்கப்பட்டுள்ளதோடு அத்துறைகள் மேலும் 31 உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளதோடு அது பொருளாதார அபிவிருத்தியின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு துறையும் அதன் கீழ் காணப்படும் வரிசை அமைச்சுக்கள் தொடர்பான கொள்கை உருவாக்கம்,திட்டங்களை தயாரித்தல், மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளை தயாரித்தல் என்பவற்றிற்கு பொறுப்பாக உள்ளது.

**துறைகள்**

1) **பேரண்ட பொருளாதார அபிவிருத்தி**
2) **விவசாயம், நீர்ப்பாசனம், காணி, கால்நடை மற்றும் மீன்பிடி**
3) **கைத்தொழில்கள், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறை**
4) **வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து**
5) **வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் விநியோகம் மற்றும் சுற்றாடல்**
6) **மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை**
7) **கல்வி, உயர் கல்வி தகவல் தொடர்பு, தொலைத் தொடர்பு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம்**
8) **சுகாதாரம், சுதேச வைத்தியம் மற்றும் விளையாட்டு**
9) **பிராந்திய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு**
10) **பொது முகாமைத்துவம் மற்றும் நல்லாட்சி**

இதற்கு மேலதிகமாக தகவல்களை பரிமாற்றம் செய்தல், நிர்வாகம், கணக்காய்வு என்பவற்றிற்காக மேலும் மூன்று வெவ்வேறான பிரிவுகள் காணப்படுகின்றன.

i. **தகவல் அபிவிருத்திக்கான மத்திய நிலையம்**
ii. **நிர்வாகப் பிரிவு**
iii. **நிதிப் பிரிவு**

**3. துறைவாரியான செயலாற்றுகை**

**3.1 விவசாயம், நீர்ப்பாசனம், பெருந்தோட்டத்துறை, மிருக வளர்ப்பு மற்றும் மீன்பிடி**

**விவசாயம்**

விவசாயத் துறையானது கடந்த சில வருடங்களாக மொத்த உள்ளூர் உற்பத்தியில் பங்களிக்கும் வீதம் குறைந்து செல்கின்ற போக்கு காணப்பட்டாலும் அது நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவே தொடர்ந்தும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. ஏனெனில் இத்துறை சுமார் 28.5 (2014) சதவீதமான தொழில் வாய்ப்புகளை பெற்றுத் தருகின்ற துறையாக காணப்படுதலேயாகும். மேலும் இது விவசாயத் துறை சார் கைத்தொழில்களுக்கும் பொருளாதார சேவைகளுக்கும் அடிப்படையாக அமைகின்றது. இத்துறையானது வேறு துறைகளின் வளர்ச்சி வீதத்தினைத் தூண்டுவதற்கும் தேசிய பொருளாதார வளர்ச்சியை ஒன்றிணைக்கும் பெறுமதி சார் சங்கிலித் தொடர்பை பேணும் ஒரு தூண்டியாகவும் செயற்படுகின்றது.

**விவசாயப் பயிர்ச்செய்கை**

விவசாயப் பயிர்ச்செய்கையானது நெல் வேளாண்மை, காய்கறிகள், பழங்கள், ஏனைய வளர் பயிர்கள், ஏற்றுமதிப் பயிர்கள், சுவையூட்டிகள் என்பனவற்றுடன் நறுமண மலர் வளர்ப்பு, தாவர வளர்ப்பு மற்றும் பசுமை தாவர வளர்ப்பு என்பனவற்றையும் உள்ளடக்கியதாகும்.

2015 ஆம் ஆண்டிற்கான விவசாய பயிர்ச்செய்கைக்கான மொத்த மூலதன முதலீடு சுமார் 4.8 பில்லியன்களாகும். அத்துடன் சுமார் 35 பில்லியன் ரூபாய்கள் உரமானியம் வழங்குவதற்காக மேலதிகமாக அரசாங்கத்தினால் செலவிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**விசேட செயற்பாடுகள்**

- இலங்கையில் நெல்லுற்பத்தித் துறையில் அரசாங்கத்தின் ஈடுபாடு மற்றும் பங்களிப்பு எனும் தலைப்பில் பங்குதாரர்களுக்கு விசேட கண்ணோட்டத்துடன் "Rice in Asia" எனும் கட்டுரை "Economist" எனும் சஞ்சிகைளில் பிரசுரிக்கப்பட்டது.
- "அரிசி புதிர்கள்" எனும் தலைப்பில் பத்திரிகையில் ஒரு கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.
- விவசாய துறையின் அபிவிருத்தியின் பங்களிப்பு தொடர்பான விடயங்கள் தயாரிக்கப்பட்டு வடக்கு-கிழக்கு அபிவிருத்தி திட்ட ஆவணத்தில் இணைக்கப்பட்டது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாய துறையினால் பூரணப்படுத்தப்பட்ட செயற்பாடுகள்**

- 08 கருத்திட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- விவசாய அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 04 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு திட்டமிடல் திணைக்களத்தின் சார்பாக அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.
- இரண்டு வெளிநாட்டு உதவித் திட்டங்கள் தொடர்பாக கருத்துக்களை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்துக்கு வழங்கியமை.
- முன்னேற்ற மீளாய்வு மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்களிவ் பங்கு பற்றியமை.
- விவசாய துறை சம்பந்தமான கருத்திட்டங்களின் முன்னுரிமை ஆவணத்தை தயாரித்தமை.

**கால்நடைகள்**

கால்நடைத் துறையானது மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கு பல்வேறு பங்குகளை வகிப்பதுடன் பிரதானமாக பாற்பண்ணை, கோழி வளர்ப்பு, பன்றி மற்றும் ஆடு வளர்ப்பு ஆகிய உப துறைகளை பிரதானமாகக் கொண்டதாகும். இத்துறையானது தற்போது 0.8 சதவீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களிப்புச் செலுத்துகின்றது. அத்துடன் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் துறையாகவும் தொழில் வாய்ப்புகளை வழங்கி சமுதாய மக்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்துவதற்கும் பங்களிப்புச் செலுத்துகின்றது.

2015 ஆம் ஆண்டில் இத்துறைக்கு சுமார் 8,573 ரூபா மில்லியன்கள் பொது முதலீடு ஒதுக்கப்பட்டது. ஆந் நிதி பிரதானமாக கால்நடை மேம்பாடு மற்றும் அபிவிருத்தி, சிறந்த கால்நடைகளை இறக்குமதி செய்தல், MILCO வின் பால் பதனிடும் தொழிற்சாலைகளை நவீன மயப்படுத்தல், கால்நடை சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள், விரிவாக்கல் சேவைகளை விரிவுபடுத்தல் மற்றும் கால்நடை ஆராய்ச்சி மற்றும் மனித வள திறன் அபிவிருத்தி என்பன மீதான மூலதன செலவுகளாகும்.

**மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்**

- கால்நடை துறை சம்பந்தமான அபிவிருத்தி பங்களிப்பு திட்டத்தினை வடக்கு கிழக்கு அபிவிருத்தி வரைவிற்கு தயாரித்து வழங்கியமை.
- 10 கருத்திட்ட முன்மொழிவுகளை மதிப்பீடு செய்து தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றுக்கு வழங்கியமை.
- கால்நடை துறை சம்பந்தமான கருத்திட்ட முன்னுரிமை ஆவணத்தை தயாரித்தமை.
- துறைசார்ந்த முன்னேற்ற மீளாய்வு மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியமை.

**நீர்ப்பாசனம் மற்றும் காணி**

நீர்ப்பாசன துறைக்கான 2015 ஆம் ஆண்டிற்குரிய மொத்த செலவினம் சுமார் 50.27 பில்லியன்களாகும். அவற்றுள் 44.58 பில்லியன்கள் மூலதன செலவினமாகும். நீர்வள அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம், ஜின் /நில்வளா திசைதிருப்பல் திட்டம், தல்பிட்டிகல நீர்த்தேக்க கருத்திட்டம் மற்றும் கிவுல் ஓயா கருத்திட்டம் என்பனவற்றின் பணிகள் தொடரப்பட்டன. ஆத்துடன் பல்வேறு புனர்நிர்மாண கருத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு விவசாயம் மற்றும் ஏனைய தேவைகளுக்கான நீர் விநியோகிக்கப்பட்டது.

காணித்துறை மீதான 2015 ஆம் ஆண்டிற்கான மொத்த செலவினம் ரூபா 7,246 மில்லியன்களாகும். இதில் ரூபா 3,006 மில்லியன்கள் மூலதனச் செலவினங்களாகும். அவற்றுள் கணிசமான அளவு பொது செலவினம் காணி உரிமை (பிம் சவிய) நிகழ்ச்சித்திட்டம் (ரூபா 113 மில்லியன்) அரச தேவைகளுக்கான காணி சுவீகரிப்பு (ரூபா 2,045 மில்லியன்) கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு/ LLRC (ரூபா 134 மில்லியன்) மற்றும் ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மீது (ரூபா 414 மில்லியன்) என்பவற்றுக்காக 2015 ஆம் ஆண்டில் குறிப்பிடும்படியான அளவில் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்கொள்ளப்பட்ட விசேட கற்கைகள்:**

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சிற்கு நீர்ப்பாசனம் மற்றும் காணி தொடர்பான நடைமுறைப்படுத்தப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் திட்டங்கள் தொடர்பான அறிக்கை தயாரித்து வழங்கியமை.
- வெளிநாட்டு உதவிக்கான வடக்கு கிழக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கான அறிக்கை தயாரிப்பில் மாவட்ட செயலகங்களுடன் இணைந்து ஈடுபட்டமை.
- துறைசார்ந்த முன்னேற்ற மீளாய்வு மற்றும் கொள்கை மீளாய்வு கூட்டங்களில் பங்குபற்றியமை.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- நீர்ப்பாசனத்துடன் தொடர்புபட்ட 08 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் என்பவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- நீர்ப்பாசனம் மற்றும் நீர்வள முகாமைத்துவ அமைச்சு, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு மற்றும் காணி அமைச்சு என்பவற்றிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட 05 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

- வானிலை விளைவுகளை கையாள்வதை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் (CRIP) வடிநில முதலீட்டுத் திட்டத்துக்கான நிபந்தனைக் குறிப்பு (TOR) தயாரிப்பின்போது அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- வானிலை விளைவுகளை கையாள்வதை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு (CRIP) மேலதிக நிதியூட்டலுக்கு அவசியமான தொழிநுட்ப உள்ளீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

- மொரகஹகந்த மற்றும் களுகங்கை நீர்த்தேக்க அபிவிருத்தி கருத்திட்டம், அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர்வள முகாமைத்துவ கருத்திட்டம், இரணைமடு நீர்ப்பாசன அபிவிருத்தி திட்டம், காலநிலை அவதானிப்பு முன்னேற்ற கருத்திட்டம் (CRIP) மற்றும் நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின் கருத்திட்ட வழிநடாத்தல் குழுக் கூட்டங்களில் பங்குபற்றியதோடு மேலும் பல முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் மற்றும் கொள்கை மீளாய்வுக் கூட்டங்களிலும் பங்குபற்றியமை.

**பெருந்தோட்டத்துறை**

பெருந்தோட்டத் துறையானது பிரதானமாக தேயிலை, இறப்பர், தென்னை என்பவற்றை பிரதானமாக உள்ளடக்கியதோடு முக்கிய மொத்த தேசிய உற்பத்தியில் 2 சதவீத பங்களிப்புச் செய்வதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தில் பெருந்தோட்டத் துறையானது முக்கிய பங்காற்றுகின்றது. இதற்கு மேலதிகமாக சீனி, பாம் எண்ணெய், முந்திரிகை, பனை ஆகியனவும் பெருந்தோட்டத் துறையில் பங்களிப்புச் செய்கின்றது. பெருந்தோட்டத் துறையானது முக்கியமாக சிறு உற்பத்தியாளர்களினால் ஆதிக்கம் செலுத்தப்படுவதுடன் மொத்த உற்பத்தியில் 70 சதவீதம் பங்களிப்புச் செய்கின்றது. எஞ்சிய 30 சதவீதமானது பிராந்திய பெருந்தோட்டத் துறை நிறுவனங்கள் மற்றும் அரசிற்குச் சொந்தமான பெருந்தோட்டத் துறை நிறுவனங்கள் ஆகியவற்றினால் பங்களிப்புச் செய்யப்படுகின்றது.

**தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் விவசாயப்பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- 30 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- பெருந்தோட்டத் துறையுடன் தொடர்புடைய 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.

- 01 உதவியாளர் விஞ்ஞாபனத்திற்கான கருத்துக்கள் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் கொள்கை மீளாய்வுக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்குபற்றியமை.

## 3.2 மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை

**மின்சாரம் மற்றும் சக்தி வளத்துறை**

**கொள்கை**

பாதுகாப்பான, நிலைபேறான, நம்பகமான மற்றும் தூய்மையான பொருளாதார ரீதியாக குறைந்த கிரயத்திலான மின்சாரத்தின் கிடைப்பனவை உறுதி செய்தல் மற்றம் சமூகத்தில் சமமான அபிவிருத்திக்கு அவசியமான மின்சார சேவைகளை பெற்றுக் கொடுப்பதுமாகும்.

நாடானது அண்மைக்காலங்களில் உறுதியான பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளதோடு அது மின்சாரத்திற்கான கேள்வியை துரிதமாக அதிகரித்துள்ளது. இலங்கையில் மின்சாரம் மற்றும்

பெற்றோலியத்தை அடிப்படையாகக் கொண்ட எரிபொருள்களே பிரதான வர்த்தக ரீதியான சக்தி வளங்களாகும். ஆகவே மின்சாரம் மற்றும் பெற்றோலிய பொருட்களின் விலை மாற்றமானது நாட்டின் பொருளாதாரத்தில் நேரடி தாக்கம் செலுத்துகின்றது.

**மின்சாரம்:**

இலங்கையில் நிறுவப்பட்டுள்ள பிறப்பாக்கிகளினூடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் 3392 மெகா வோட்களை பொருத்தப்பட்ட அலகுகளாகவும் 12,357 ஜிகா வோட் மணித்தியாலங்கள் மின்சார பிறப்பாக்கத்தினையும் கொண்டதாகும். எனினும் இலங்கையின் மின்சாரத்திற்கான கேள்வி தற்போது சுமார் 5 – 7 சதவீதத்தாலும் எதிர்காலத்தில் வருடாந்தம் 4—6 சதவீதத்தாலும் அதிகரித்துச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வருடாந்தம் சுமார் 200 மெகா வோட்களை பொருத்தப்பட்ட அலகுகளாக குறைந்த செலவில் மின்னுற்பத்தி மேற்கொள்ளவேண்டிய தேவை எழுந்துள்ளது.

- இலங்கையின் தற்போதைய மின்மயமாக்கல் நிலை கிட்டத்தட்ட 98 சதவீதமாகும். மேலும் அரசாங்கம் அதனை 100 சதவீதமாக 2016 ஆம் ஆண்டளவில் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கின்றது. நாட்டில் தற்பொழுது சுமார் 270,000 குடும்பங்கள் இன்னமும் மின்சார இணைப்பு வழங்கப்பட வேண்டியவர்களாக உள்ளனர்.

**பெற்றோலியத் துறை**

**கீழ் நோக்கிய பெற்றோலியத் துறை**

***தற்போதைய நிலைமை***

தற்போது இலங்கையின் மசகு எண்ணெய்க்கான ஒரு நாளைய கேள்வியானது 100 கிலோ பெரல்களாகும். இது மேலும் 5 சதவீதத்தினால் அதிகரித்துச் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் வருடாந்தம் இலங்கை சுமார் 5000—5500 மில்லியன் அமெரிக்க டொலர்களை பெற்றோலியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குச் செலவிடுகின்றது.

**மேல் நோக்கிய பெற்றோலியத் துறை**

***தற்போதைய நிலைமை***

இலங்கையின் மன்னார் கரையில் மேற்கொள்ளப்பட்ட எண்ணெய் அகழ்வு நடவடிக்கைகளின் பலனாக இலங்கையில் உயர் தரத்திலான இயற்கை வாயு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனை எதிர்கால மின்சார தேவைகளுக்கு பயன்படுத்த முடியும். இக் கண்டுபிடிப்பின் பொருளாதார ஸ்திரத் தன்மையை மேலும் ஆய்வு செய்தல், உள்ளூர் எரிவாயு தயாரிப்பதற்கு இயலுமான உச்ச அளவு, கேள்வி, பொருளாதாரம், சூழல் என்பவற்றை இனங்காணல் என்பன தற்போதைய சவால்களாக உள்ளன.

**2015ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்கள்**

இக் காலப்பகுதியில் சுமார் 11 கருத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மின்சாரம் மற்றும் சக்திவளத்துறையின் அபிவிருத்தி செயற்பாடுகளிற்காக அனுமதி வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மின்சாரம் மற்றும் சக்திவளத்துறையினால் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- மின் சக்தி அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 04அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் துணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பெற்றோலிய அமைச்சினால் தயாரிக்கப்பட்ட பெற்றோலிய விலைச் சூத்திரம் தயாரிப்பு செயற்பாடுகளில் உள்ளீடுகளை வழங்கியமை.
- மின்சாரம் மற்றும் பெற்றோலியத்துறை தொடர்பான முன்மொழிவுப் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டன

### 3.3 வீதிகள், துறைமுகங்கள் மற்றும் போக்குவரத்து

**வீதித் துறை**

வீதி உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது நாட்டின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செலுத்தும் வகையில் பாரிய அபிவிருத்தி நகரங்களையும் பொருளாதார வலயங்களையும் இணைக்கும் வகையில் தேர்ச்சிமிக்க வலையமைப்பாக உருவாக்கப்பட வேண்டுமென்பது எமது அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கையாகும். அத்துடன் வீதிக் கட்டமைப்பானது பாதுகாப்பு, சமத்துவம் என்பவற்றையும் உறுதிப்படுத்துதல் வேண்டும். மேலும் இத்துறை பல்வேறுபட்ட சவால்களை எதிர்நோக்குகின்ற துறையாகவும் காணப்படுகின்றது. தலைநகர், மாகாண தலைநகர்கள் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையங்களை இணைக்கும் கடப்பாடு இத்துறைக்கு உண்டு. மேலும் மனிதர்கள், பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான பிரயாணத் தேவை அதிகரிப்பு, அதிகரித்த வாகன போக்குவரத்திற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், வீதிப் போக்குவரத்து சாலைகளிலுள்ள குறுகலான பாதையமைப்பு மற்றும் தரமற்ற பாலங்கள் போன்ற குறைபாடுகளை நீக்குதல், பாதசாரிகளுக்கான நடைபாதையை அமைத்தல், நிலையான வீதிப் பராமரிப்பு மற்றும் விபத்துக்கள் அற்ற வீதியமைப்பை ஏற்படுத்தல் என்பன அவற்றுள் சிலவாகும்.

**போக்குவரத்து**

குறைவான மத்திய வருமானமுடைய நாடுகளின் நிலபோக்குவரத்துக்கான தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்துவரும் கேள்வியினை பூர்த்தி செய்ய தேவைப்படும் இயங்காற்றலினை அடைந்துகொள்வதற்கு போக்குவரத்து துறையின் கொள்திறனை அதிகரிப்பது அரசினுடைய நோக்கமாகும். எனவே முக்கிய அபிவிருத்தியடைந்துவரும் போக்குவரத்துடன் தொடர்புடைய உட்கட்டமைப்பில் குறிப்பாக புகையிரத தண்டவாளங்கள், உருளும் இருப்புகள், சமிஞ்சை முறைமை மற்றும் உள்ளக மாதிரி போக்குவரத்து முறையின் அபிவிருத்தி போன்ற புகையிரத உட்கட்டமைப்புகள் மீது நிலையான முதலீடுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. துறையில் ஏற்படும் இவ்வகையான தலையீடுகளானது நுகர்வோன் சார்ந்ததாகவும் வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மை மிக்கதுமான துறையாக மாற்ற நோக்கப்படுகின்றது. மேலதிகமாக அரச போக்குவரத்து மூலங்களை ஊக்குவிப்பதனூடாக முக்கிய பயணப் பாதைகளில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்கு ஒரு தீர்வினை வழங்க அரசானது தீர்மானித்துள்ளது.

**துறைமுகங்கள்**

2015ம் ஆண்டளவில் இலங்கை துறைமுகம் மற்றும் கப்பல் துறையானது கொள்கலன் கையாளுகை மற்றும் வருகை தரு கப்பல்களின் எண்ணிக்கையினை மேம்படுத்த இயலுமானதான இருந்தது. இருப்பினும் 2013ல் வருகைதரு கப்பல்களின் எண்ணிக்கையில் ஒரு வீழ்ச்சியினைக் காட்டுகின்றது. மொத்த சரக்குக் கப்பல்களின் கையாளுகை இந்த ஆண்டு 4.5% இனால் அதிகரித்தது அதாவது 77.6 மில்லியன் ஆகவும் மொத்த கொள்கலன் ஏற்றி இறக்குதல் வருமானம் 5.3 சதவீதத்தினால் அதிகரித்து சுமார் 5.6 மில்லியன் ஆகவும் காணப்பட்டது.

**விமானப் போக்குவரத்து**

பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையமானது பயணிகளைக் கையாளுதல், ஆகாய சரக்கு பரிமாற்றல் மற்றும் ஆகாய விமானங்களின் அசைவுகள் என்பவற்றில் ஒருநிலையான வளர்ச்சியை காட்டுகின்றது. 2015ல் 8.5 மில்லியன் பயணிகளை கையாண்டிருப்பதுடன் 2014லுடன் ஒப்பிடும் போது 9 சதவீத வளர்ச்சியினையும் கண்டுள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினால் கையாளப்பட்ட மொத்த ஆகாய விமான அசைவுகளின் எண்ணிக்கையானது 58,729 ஆக அதிகரித்திருப்பது 6 சதவீத வளர்ச்சியினை காட்டிநிற்பதோடு மொத்த ஆகாய மார்க்கமான சரக்கு பரிமாற்றல் 215,032 ஆகவும் அதிகரித்திருப்பது 12 சதவீத வளர்ச்சியாகும்.

முக்கிய நிகழ்வுகள்

- பொருத்தமான கோர்வையான அமைச்சுக்களால் மதிப்பிடப்பட்ட 11 புதிய கருத்திட்டங்களுக்கு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது
- வீதி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறைக்கான கருத்திட்ட வழித்தடங்கள் உருவாக்கப்பட்டுள்ளது
- கொள்கை ஆவணத்திற்காக வீதி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறைக்கு அத்தியாயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாண அபிவிருத்தி திட்டத்திற்கு வீதி, போக்குவரத்து, துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து துறைக்கு அத்தியாயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- 2015 – 2018க்கான பொதுமுதலீட்டு நிலைநிறுத்தும் பட்டியல் (வரைவு செய்யப்பட்டுள்ளது)
- துறைகளுடன் தொடர்புபட்ட தற்காலப் பிரச்சனைகள் ஆராயப்பட்டது
- உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு, போக்குவரத்து மற்றும் விமான சேவை அமைச்சு என்பவற்றிலிருந்து பெறப்பட்ட பாதை மற்றும் போக்குவரத்து தொடர்பான 21 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்பு வழங்கப்பட்டது.
- செயற்குழு கூட்டம், மதிப்பாய்வு கூட்டம் மற்றும் வெளிநாட்டு தூதுக்குழு உள்ளடங்கலாக சுமார் 20 செயலமர்வுக்கூட்டங்களில் பங்குபற்றியுள்ளமை.

## 3.4 வீடமைப்பு, நகர அபிவிருத்தி, நீர் வளம் மற்றும் சுற்றாடல்

### வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு மற்றும் பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சு ஆகியன மேற்கூறப்பட்ட இரண்டு துறைகளினதும் வரம்பிற்குட்பட்ட இரண்டு அமைச்சுக்கள் ஆகும்.

2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள், வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட எட்டு அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பதின்மூன்று கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டன. அதே வேளை, பாரிய நகரம் மற்றும் மேற்கத்திய அபிவிருத்தி அமைச்சின் ஆறு அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அவதானிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் இருபத்திரெண்டு கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்**

- வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி துறைகளிற்குரிய எதிர்கால அபிவிருத்தி உபாயங்களை சேர்த்துக்கொள்வதற்கான எண்ணக்கரு ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன.

- ''செமட்ட செவண'' வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் தீவு பூராகவும் பாதிக்கப்பட்ட மக்கள் சகலரதும் ஒழுக்கமான வாழ்க்கை முறையினை உறுதிப்படுத்துவதற்காக உதவி அளிக்கின்ற திட்டமாக ஆரம்பிக்கப்பட்டது.

- கருத்திட்ட இருப்பு தயாரிக்கப்பட்டது.

- ''வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கான அபிவிருத்தித்திட்டம்'' ஒன்று தயாரிக்கப்பட்டது.

- உள்ளூர் நிர்மாணக்கைத்தொழில் நிறுவனங்களிற்கு வசதியளிப்பதற்காக நிர்மாணக்கைத்தொழில் நிறுவனங்களுடன் தொடர்ச்சியான கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

**நீர் வழங்கல்**

சிறந்த நீர் வசதிகளைப் பெற்றுக் கொள்வதென்பது ஒரு நாட்டிலுள்ள பிரஜைகளின் அடிப்படைத் தேவை மட்டுமல்லாது ஒரு நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப நிபந்தனையாகவும் கொள்ளத்தக்கது. ஆகவே அனைவருக்கும் பொதுவான பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை பெற்றுக் கொடுத்தலினூடாக மக்களின் சமூகப் பொருளாதார நிலைகளை மேம்படுத்தல், வணிக மற்றும் கைத்தொழில் துறைக்கு தேவையான நிர் வழங்கல்களை அதிகரித்தல் என்பன கருத்திலெடுக்கப்பட்டு அதனூடாக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்காக அரசாங்கத்தினால் கொள்கைகள் வகுக்கப்படுகின்றன.

அதேபோன்று இத் துறைக்கான முதலீடு இந்த ஆண்டு பிரதேசங்களுக்கிடையில் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு என்பவற்றில் காணப்படும் பிராந்திய வேறுபாடுகளை நீக்கும் வகையில் பின்தங்கிய பிரதேசங்களுக்கு முன்னுரிமை வழங்கியே தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சுத்தமான குடிநீர் தேவை அதிகமாக உள்ள பிரதேசங்களை இனங்கண்டு அவற்றுக்கு சிறந்த குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டது. அத்துடன் பின்தங்கிய பிரதேசங்களில் காணப்படும் சமூக குடிநீர் திட்டங்களிற்குப் பதிலாக குழாய் மூலமான குடிநீர் திட்டங்களை தரமுயர்த்தி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**அடையப்பட்ட இலக்குகள்**

- 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 16 கருத்திட்ட முன்மொழிவுகள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சிலிருந்து பெறப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- நகர திட்டமிடல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 03 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு நேரடி மற்றும் அனுசரணை அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.
- பொது முதலீட்டு செயற்திட்டத்திற்கு(PIP 2015- 2018) துறைசார்ந்த வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டமை
- 10 Aide Memoires அபிவிருத்தித் திட்டங்களுக்கான கருத்துகளை தயாரித்து வெளிநாட்டு வள திணைக்களத்திற்கு வழங்கியமை.

- சுமார் 30 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள், கலந்துரையாடல்கள் மற்றும் வெளிநாட்டு பணிக் கூட்டங்கள் என்பவற்றில் கலந்து கொண்டமை.
- வடக்கு கிழக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கு துறைசார் அறிக்கை வழங்கியது.
- துறைசார் திட்ட ஒழுங்கு வரைவு தயாரித்தமை.

**சுற்றாடல்**

இத் துறையின் தேசிய கொள்கையானது பேரழிவின் மூலம் ஏற்படலாம் என எதிர்பார்க்கக்கூடிய ஆபத்துக்களையும் மக்கள், சொத்துக்கள் மற்றும் பொருளாதாரம் என்பவற்றில் ஏற்படும் தாக்கங்களையும் குறைப்பதன் மூலம் சுற்றாடலின் தரம் மற்றும் இலங்கையின் பாதுகாப்பு என்பவற்றினை உறுதிப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கும் போது தேவையான அளவு முதலீட்டுடன் வலுவான பொருளாதார அபிவிருத்திக்கு வசதி அளிப்பதுடன் நிலைதகு அபிவிருத்தியினை நோக்கிச் செல்வது ஆகும்.

வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கும் சனத்தொகையுடன் உணவு, நீர், சக்தி, நிலம் மற்றும் ஏனைய இயற்கை வளங்கள் என்பவற்றிற்கான கேள்வி அதிகரிப்புடன், உலகமானது பசுமையான சுத்தமான மற்றும் நெகிழ்வுத் தன்மையுள்ள அபிவிருத்தியுடனான இலக்கினை அடைவதில் பாரிய சவாலினை எதிர்நோக்குகின்றது. மாறி வரும் காலநிலை மாற்றங்கள் மேலும் சுற்றாடல் சீரழிவிற்கு வழிவகுப்பதுடன் இதன் விளைவாக விசேட சவால் தொகுதியும் முன்வைக்கப்படுகின்றது. அதிகரித்துக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்களின் தாக்கத்தினால் நிலைதகு அபிவிருத்தியினை சுருக்கமடைய வழிவகுத்தல், வறுமையை வெளிப்படுத்தும் காலப்பகுதி குறைக்கப்படும், மற்றும் சுத்தத்தை முன்னோக்கி நகர்த்தும் தேவை, மிகவும் திறமையான சமமான வளர்ச்சியினைக் கொண்டுள்ள தன்மை ஆகியன காணப்படும்.

எனவே, சுற்றாடல் துறையானது பொருளாதார வளர்ச்சியின் திருப்புமுனையாகவும் பொருளாதார விஞ்ஞானத்தின் வளர்ந்து வரும் பகுதியாகவும் கருதப்படமுடியும். சுற்றாடல் துறையானது குறைந்தளவு காபன், சுத்தமான மற்றும் பசுமையான சூழல், இழிவளவாக்கப்பட்ட மாசடைதல், சிறந்த உயிர் பல்வகைத்தன்மையும் சுற்றுச்சூழல் சேவைகளும், சூழலில் ஏற்படும் ஆபத்தினைக் குறைத்தல், திறமையானதும் நிலைதகு வள நுகர்வுடனான முன்னேற்றமான மனித நல்வாழ்வு, சமூக சமத்துவம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் ஆகியவற்றினை அடைந்து கொள்வதினைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

சூழல் மாசடைவதனைக் கட்டுப்படுத்துதல், வனப்பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி, நிலைதகு காணி முகாமைத்துவம், வனவிலங்கு - மனித சகவாழ்வு, உயிர்வள பாதுகாப்பு மற்றும் நிறுவன மீள்கட்டமைப்பு மற்றும் ஊக்குவிப்பு ஆகியன சூழல் - நன்மைகளை ஏற்படுத்துவதற்காக அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் சுற்றாடல் துறையின் கீழ் முக்கிய கொள்கைப் போக்குகளாக பின்பற்றப்படும்.

**விசேட நிகழ்வுகள்**

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 21 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 11 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அவதானிப்புக்கள் வழங்கப்பட்டன.

- சுற்றாடல் முகாமைத்துவத்துறையின் கீழ் உள்ள கருத்திட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களும் நிறுவனங்களும் கொள்கைகள் மற்றும் உபாயங்கள் தயாரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

## 3.5 கைத்தொழில்கள், வர்த்தகம், சுற்றுலாத்துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு

**கைத்தொழில், வர்த்தகம் மற்றும் சுற்றுலாத்துறை**

இக்கொத்தணியானது ஐந்து உப பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன கைத்தொழில், வர்த்தகம் மற்றும் முதலீடு, சுற்றுலா, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு.

**கைத்தொழில்துறை**

கைத்தொழில்துறையானது முக்கியமாக மூன்று உப பிரிவுகளான தொழிற்சாலைகள், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (SMEs) மற்றும் அரசிற்கு சொந்தமான தொழில் முயற்சிகள் (SOEs) ஆகியவற்றைக் கொண்டுள்ளது. ஏனெனில் அரசு ஆனது கைத்தொழில் துறையினை நாட்டின் நிலைதகு பொருளாதார அபிவிருத்திக்குரிய முக்கிய துறையாக இனங்கண்டுள்ளதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களமானது தொழிற்சாலைகள், SMEs மற்றும் SOEs ஆகியவற்றினை வலுவூட்டுவதற்கு தேவையான உள்ளீடுகள் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் மற்றும் தலையிடுவதன் மூலமும் நாட்டின் சகல அபிவிருத்தி நோக்கங்களை அடைவதனை நோக்கமாகக் கொண்டுள்ளது.
அரசாங்கத்தின் கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கையானது ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களிற்கு உயர் பெறுமதி சேர்க்கை, உயர்ந்தபட்ச தொழில் நுட்ப செறிவு, புவியியலுடன் தொடர்புடைய இடம் மற்றும் பல்வகைப்படுத்தப்பட்ட கைத்தொழில்களை உருவாக்குவதில் தனியார் துறையினருக்கு உதவுவதன் மூலம் கூடுதல் கவனம் செலுத்துகின்றது. இது பல்வகைப்படுத்தல், சுற்றாடலிற்கு உகந்ததாக இருத்தல், உயர் பெறுமதி சேர்ப்பு, பிரதேச ரீதியில் பரவலாக்கப்படுதல் மற்றும் உலக ரீதியில் போட்டித்தன்மையான கைத்தொழில் துறை ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. இதற்கமைய அதனது கொள்கை இலக்குகளை அடைந்து கொள்ளும் வகையில் வழிநடாத்துவதில் தேசிய திட்டமிடல் திணைக்களமானது பல்வேறு வகைகளிலும் 2015 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை ஆற்றி பங்களிப்புச் செய்துள்ளது.

**நிறைவேற்றப்பட்ட பணிகள்**

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 30 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டு அவதானிப்புக்கள் வரவு செலவுத்திட்டத் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஆகியவற்றிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.

- “சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் (SMEs) அபிவிருத்திக்கான தேசிய கொள்கைச் சட்டகம்” தயாரிப்பதற்கான தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

- சகல பங்குதாரர்களுடனும் ஆசிய அபிவிருத்தி வங்கியுடனும் (ADB) ஒன்றிணைந்து செயலமர்வு ஒன்று “Economic Corridor Development” எனும் தலைப்பில் கொண்டு

நடாத்தப்பட்டதுடனும் ஆய்வினை மேற்கொள்வதற்குரிய தொழில் நுட்ப உதவிகள் வழங்கப்பட்டன.

- குழுக்களை தெளிவாக்கியதுடன் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய நாடுகளிற்கு விஜயம் மேற்கொண்டதுடன் வெளிநாட்டு வளத் திணைக்களம் ஊடாக உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) ஆகிய உதவியாளர் விஞ்ஞாபனங்களிற்காக வெவ்வேறு அபிவிருத்தி பங்காளிகளினால் கருத்துக்கள் வழங்கப்பட்டன.

**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத்துறை**

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறையின் கொள்கையானது வேலையாட்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் மற்றும் பொருளாதார அபிவிருத்தியினை அடைவதற்கு முக்கியமான ஆரோக்கியமான கைத்தொழில் உறவுகளை மேம்படுத்தலையும் நோக்காகக் கொண்டுள்ளது. இந்நிலைமையில், நடைமுறையில் உள்ள சட்டங்களையும் ஒழுங்குகளையும் செயற்படுத்தும் போது வளர்ந்து வரும் நிலைமையினை அடைந்து கொள்வதற்கு ஏற்ப தேவையான சகல சீர்திருத்தங்களை மேற்கொள்வதுடன் அவை யாவும் சர்வதேசத்தின் சிறந்த நடைமுறையுடன் ஒத்துப் போகக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். இனங்காணப்பட்ட இத்தேவையினை அடைவதற்கு 2015 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகளை ஆற்றி பங்களிப்புச் செய்துள்ளது.

- உரிய நிரல் அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட மூன்று கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டன.

- மூன்று அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கும் உதவியாளர் குறிப்புக்களுக்கும் அவதானிப்புக்கள் வழங்கப்பட்டது.

- 2016 - 2018 ஆண்டிற்குரிய அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம், பொருளாதார அபிவிருத்தித்திட்டம் மற்றும் தேசிய பொருளாதாரக் கொள்கை ஆகியவற்றிற்குரிய தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறைக் குறிப்பும் 2016 - 2018 ஆண்டிற்குரிய கருத்திட்ட முதலீட்டு அட்டவணையும் தயாரிக்கப்பட்டன.

- கருத்திட்ட இருப்பு மேம்படுத்தப்பட்டது.

- ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றில் தவறிழைப்பவர்களின் தரவு சேகரிக்கப்பட்டது.

- UNGA இன் எழுபதாவது அமர்விற்காக முறைசாரா வேலையாட்களை முறையான பொருளாதாரத்திற்கு உள்ளீர்ப்பதனை நோக்கமாகக் கொண்ட மேம்படுத்தப்பட்ட தேசிய முயற்சிகள் தயாரிக்கப்பட்டன.

**சுற்றுலாத்துறை**

தற்போது சுற்றுலாத்துறையே நாட்டில் மூன்றாவது வெளிநாட்டுச் செலாவணியை பெற்றுத்தரும் கைத்தொழிலாக விளங்குகின்றது. தற்போதைய மொத்த தேசிய உள்நாட்டு உற்பத்தியில் சுற்றுலாத்துறையின் பங்களிப்பு அண்ணளவாக 3.5 சதவீதம் ஆகும். 2015 ஆம் ஆண்டில் அண்ணளவாக 1.79 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் இந்நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இத்தொகையானது தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. சுற்றுலாத்துறையின் மூலம் கிடைக்கும் வருமானமும் 2.92 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதிக்கு 2015 ஆம் ஆண்டு அதிகரித்துள்ளது. சுற்றுலாத்துறையானது தனியார் துறையினால் மேற்கொள்ளப்படும் ஒரு கைத்தொழிலாக இருக்கின்ற பொழுதிலும் உகந்த சூழ்நிலையினை ஏற்படுத்துவதற்காக அரசாங்கமானது வசதியளிப்பவராக செயற்படுகின்றது.

2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியினுள் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய கீழ்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**விசேட நடவடிக்கைகள்**

- சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சிடமிருந்து கிடைக்கப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகளின் மொத்த எண்ணிக்கை இரண்டு மற்றும் இரண்டு முன்மொழிவுகள் நிதியுதவி பெறுவதற்காக சிபார்சு செய்யப்பட்டது.

- சுற்றுலாத்துறை அபிவிருத்தியுடன் தொடர்புபட்ட ஒரு அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் அவதானிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

## 3.6 சுகாதாரம், கலை தேசிய நல்லிணக்கம், விளையாட்டு மற்றும் சுதேச வைத்தியம்

ஆரோக்கியமான தேசம் ஒன்றானது முக்கியமாக நாட்டின் ஈர்க்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியினை பூர்த்தி செய்யக்கூடிய ஒன்றாகும். எனவே, சுகாதாரத்துறையில் அரச கொள்கை ஆனது தேசிய சுகாதார சேவையை மேம்படுத்தத் தேவையான நிறுவன மற்றும் கொள்கை மறு சீரமைப்புடன் அதிகரிக்கப்பட்ட முதலீடுகளைச் சுகாதாரத்துறைக்கு முதலிடுவதுடன் ஆரோக்கியமான தேசத்தினை உருவாக்குவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

- 33 மதிப்பிடப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள் செயற்படுத்துவதற்காக சிபார்சு செய்யப்பட்டடன. அவதானிப்புகள் தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களம், வெளிநாட்டு வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் நிறுவனங்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட 6 அமைச்சரவை விஞ்ஞாபனங்களிற்கு அமைச்சரவை அவதானிப்புகள் தயாரிக்கப்பட்டன.
- சுகாதாரத்துறை அபிவிருத்தி கருத்திட்டத்திற்கான செயல் திட்டம் தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- வெளிநாட்டு நிதி உதவித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உரிய நிதி உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக பல கூட்டங்கள் நடாத்தப்பட்டு உலக சுகாதார நிறுவனம், உலக வங்கி, KOICA, JICA ஆகியவற்றின் அதிகாரிகளுக்கு அவதானிப்புக்கள் மற்றும் உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- பல்வகைத்தன்மையுடைய செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கும் மற்றும் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கும் குணமாக்குவதற்கும் தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சுகாதாரத்துறையில் உள்ள தேவைகள் ஆராயப்பட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சுகாதாரத்துறை அபிவிருத்தி இற்கான செயல் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

## சமய, கலாச்சார, தேசிய பாரம்பரியம் மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புத்துறை

இந்த துறையானது ஏழு அமைச்சுக்களைக் கொண்டுள்ளது. அவையாவன புத்த சாசன அமைச்சு, மீள் குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சு, தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு, உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு. இவ் ஏழு அமைச்சுக்கள் பௌத்தம், இந்து, கிறிஸ்தவம் மற்றும் முஸ்லிம் சமயம், கலாச்சாரம், பாரம்பரியம், தேசிய ஆவணக்காப்பகங்கள், தேசிய தொல்பொருட்காட்சியகங்கள், அரச கரும மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்கி இருக்கும்.

### விசேட நடவடிக்கைகள்

- 02 அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கு அமைச்சரவை அவதானிப்புக்கள் தயாரிக்கப்பட்டன.
- 2015 ஆம் ஆண்டினுள் 51 கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கு பற்றியமை.

### விளையாட்டுத்துறை

விளையாட்டுத்துறையானது சர்வதேச விளையாட்டு போட்டித்தொடர்களில் பதக்கங்களை வெல்லுவதில் கணிசமான அளவு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. ஆசிய இளைஞர் மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டி, டோகா திறந்த சர்வதேச குத்துச்சண்டை போட்டித்தொடர், ஆசிய கிராண்ட் பிரிக்ஸ் போட்டித்தொடர் 21 வது ஆசியக்கிண்ண மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டித்தொடர், தாய்லாந்து திறந்த மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டித் தொடர், 5 வது பொது நலவாய சபை இளைஞர் விளையாட்டுப் போட்டி, 8 வது பொது நலவாய சபையின் கராத்தே போட்டித்தொடர், தாய்லாந்து கனிஷ்ட மெய் வல்லுனர் போட்டித் தொடர், 25 வது திறந்த சர்வதேச கராத்தே போட்டித்தொடர், ஆசியக்கிண்ண மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டித் தொடர், பொது நலவாய சபையின் பழு தூக்கும் போட்டித்தொடர், மலேசியா திறந்த மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டித் தொடர் என்பன அவ் போட்டித்தொடர்களாகும். 2015 ஆம் ஆண்டில் கீழ்வரும் பணிகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

- 04 கருத்திட்ட முன் மொழிவுகள் மதிப்பிடப்பட்டதுடன் செயற்படுத்துவதற்காக பரிந்தரை செய்யப்பட்டன. தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம், வெளி வளத் திணைக்களம் மற்றும் உரிய நிரல் அமைச்சுக்களிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.
- விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அவதானிப்பு தயாரிக்கப்பட்டது.
- விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்ட முன் மொழிவுகளில் காணப்பட்ட சில பிரச்சனைகளை தீர்ப்பதற்கு விளையாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சுடனும் மற்றைய உரிய நிறுவனங்களுடனும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

## 3.7 கல்வி, உயர் கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி, தகவல் தொடர்பாடல், தொழில் நுட்பம் மற்றும் ஆராய்ச்சி

**கல்வி**

இலங்கையின் பாடசாலைக்கல்வி முறைமையானது நிறைவான தனிநபர்களை அவர்கள் கல்வி அறிவுடன் மட்டுமல்லாது திறன், நுண்ணறிவு, விழுமியங்கள் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குரிய சவால்களை எதிர் நோக்கக்கூடிய அணுகுமுறைகளை உடையவர்களாகவும் உருவாக்குவதே அதனது நோக்கமாகக் கொண்டுள்ளது. கல்வித்துறையானது 2015 ஆம் ஆண்டில் பொருளாதார அறிவினை உருவாக்கும் நோக்கில் பாரிய மைல்கல்லை அடைந்துள்ளது.

2015 ஆம் ஆண்டில் கல்வித் துறையில் 13 வருட கட்டாயக்கல்வி, பாடசாலை பெயர்ப்பலகைகளை அமைத்தல் மற்றும் ஆசிரியர்கள் ஆட்சேர்ப்பு, முகாமைத்துவம் உள்ளடங்கலாக பல கொள்கைச் சீர்திருத்தங்களிற்குரிய முன்னேற்பாட்டுக் கலந்துரையாடல்கள் நடைபெற்ற ஆண்டாக விளங்குகின்றது. கல்வியின் தரத்தினை முன்னேற்றுவதனை வலியுறுத்துவதற்காக ஆசிரியர்களின் தரத்தினை முன்னேற்றுதல் மற்றும் மாணவர்களைக் கவரக்கூடிய கற்றல் முறைமைகள் விசேடமாக இலத்திரனியல் கற்றல் முறைமை ஆகியன ஏற்படுத்தப்பட்டன.

**பூரணப்படுத்தப்பட்ட இலக்குகள்**

- கல்வி அமைச்சுடனும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுடனும் பொதுக்கல்வித்துறையினை முன்னேற்றிச் செல்வதற்குரிய கலந்துரையாடல்களில் உயிர்ப்புடன் பங்குபற்றியமை.

- வழிகாட்டல் குழுக்கூட்டங்களில் பங்குபற்றியமை மற்றும் கல்வித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் அறிவின் மையத்தின் அடித்தளமாக பாடசாலைக்கல்வி முறைமையினை மாற்றி அமைக்கும் முறைமைக் கருத்திட்டம் ஆகியவற்றிற்கான குழுக்கூட்டங்களினை ஏற்பாடு செய்ததுடன் பங்குபற்றியமை.

- “வலய மற்றும் மாகாண மட்டங்களில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப மையங்களை ஏற்படுத்துவதன் மூலம் தேசிய இலத்திரனியல் கற்றல் நடைபாதை உள்ளிட்ட பொதுக்கல்வி முறைமையில் விரிவான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்ப உபாயங்களை அமைத்தல்” ஆகிய கருத்திட்டத்துடன் தொடர்புடைய கூட்டங்களிலும் செயலமர்வுகளிலும் உயிர்ப்புடன் பங்குபற்றியமை. மேலும் இக்கருத்திட்டமானது இலங்கையின் பொதுக்கல்வி முறைமையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பம் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்த வழிவகுக்கும்.

- 100 நாள் செயற்றிட்டத்தினை செயற்படுத்த தோட்டத்துறை பாடசாலைகளின் அபிவிருத்தியினை மேற்கொள்ள வசதி செய்து கொடுக்கப்பட்டது.

- அமைச்சுக்களினாலும் நிரல் நிறுவனங்களினாலும் சமர்ப்பிக்கப்பட்ட புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுடன் தொடர்புடைய கருத்திட்ட இருப்பு மேம்படுத்தப்பட்டது.

